முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.*

திரு. செ. பெருமாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மாவின் அரசு கேட்காமலேயே மக்களுடைய தேவைகளை தாயுள்ளத்தோடு நிறைவேற்றி வருகிறது. எனது தொகுதியான ஏற்காடு தொகுதியிலே, பாப்பநாயக்கன்பட்டி, வீமுன்பாலம், ஏழுபுளி, ஆத்தலூர், மேட்டுக்காடு, அரசநத்தம், சின்னமலப்பாடி, பெரியமலப்பாடி ஆகிய 8 கிராமங்கள் அடங்கியுள்ளன. கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டி 10 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால், அப்பகுதியினுடைய மக்கள் சிரமப்படுகிறார்கள். கால்நடைகளைப் பராமரிக்க வேண்டி, பாப்பநாயக்கன்பட்டியில் ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க வேண்டி, மறுபரிசீலனை செய்து அந்த மலைவாழ் மக்களுடைய குறைகளை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளின்படி மேற்படி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

தாவரக் கழிவிலிருந்து மின் உற்பத்தி

***6932—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 4]

கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. டிசம்பர் மாதம் மின் உற்பத்தி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேட்டால் ஏற்பட்ட மின்வெட்டை அகற்ற, தான் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற நாள் முதல், தனது சீரிய முயற்சியினால் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு உடன்குடி விரிவாக்கத் திட்டம், உப்பூர் அனல் மின் திட்டம், எண்ணூர் சூப்பர் கிரிடிக்கல் திட்டம், தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் மற்றும் சூரிய ஒளி மின்சக்தித் திட்டங்கள், காற்றாலைத் திட்டங்கள், பயோமாஸ் மின் திட்டங்கள் போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கியதோடு, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் என அறிவித்தமைக்கும், தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று அறிவித்த 22 மணி நேரம் அயராது உழைத்து தமிழக மக்களை கண் இமைபோல் காக்கும் எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள சர்க்கரை ஆலையிலே தயாரிக்கப்படும் மின்சாரம் அவர்களுடைய*

தேவைகளுக்குப் போக உபரியாக இருக்கிறது. அதேபோன்ற திட்டங்களை தமிழகத்திலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இப்போது 183 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்ற பிப்ரவரி 2013 ஆம் ஆண்டு துவங்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. உடனடியாக நடவடிக்கை எடுத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதனால் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

பேருந்து வசதி

***1935—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, புதிய பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.